*கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டை தொடர்பில் பொதுவாக எழுகின்ற வினாக்கள்*

1. *கார்கில்ஸ் வங்கி படத்துடன் கூடிய அட்டைகள் எனப்படுவது யாது?*
**நீங்கள் விரும்புகின்றவாறு சொந்தமான ஒரு படத்தை அல்லது கார்கில்ஸ் வங்கி படங்கள் வைப்பகத்தை உபயோகித்து உங்களுடைய கார்கில்ஸ் வங்கி கடனட்டையை நீங்கள் பிரத்தியேகமாக வடிவமைத்துக் கொள்ள முடியும்.**

2. *கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டையொன்றுக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க முடியும்?*
**எமது எந்தவொரு கார்கில்ஸ் கிளைக்கும் வருகை தந்து, படத்துடனான அட்டைக்கான விண்ணப்பத்தை இலகுவாக பூர்த்தி செய்து கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டைக்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும்.**

3. *எனது கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டையில் எந்த வகையான படங்களை நான் உபயோகிக்க முடியும்?*
* **உங்களது சொந்த படங்கள் எதனையும் நீங்கள் உபயோகிக்க முடியும்.**
* **எமது கார்கில்ஸ் வங்கி படங்கள் வைப்பகத்திலிருந்தும் நீங்கள் தெரிவு செய்ய முடியும்.**
* **கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டை வழிகாட்டல் விதிமுறைகளை பார்க்கவும்.**

**4.** *நான் விண்ணப்பித்த படம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதை நான் எவ்வாறு அறிந்து கொள்வது?*
* **உங்களுடைய படத்தின் நிலவரம் தொடர்பாக வங்கியிடமிருந்து உறுதிப்படுத்தும் அழைப்பொன்றை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.**

5. *நான் இணையத்தின் மூலமாக எனது படத்தை பதிவேற்றம் செய்து கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டைக்கு விண்ணப்பிக்க முடியுமா?*
* **இல்லை.**

6. *கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டைக்கு எவ்வகையான கட்டணங்கள் அறவிடப்படுகின்றன?*
* **புதிய அட்டைகள், சொந்தப் படங்கள் - படத்துடனான அட்டை சேவைக் கட்டணம் ரூபா 750/-**

* **புதிய அட்டைகள், வைப்பகப் படங்கள் - படத்துடனான அட்டை சேவைக் கட்டணம் ரூபா 500/-**

**படத்தை மாற்றம் செய்தல் - படத்தை மாற்றுவதற்கான கட்டணம் ரூபா 250ஃ- ு மாற்று அட்டைக்கான கட்டணம் ரூபா 500ஃ- (தற்போதைய வாடிக்கையாளர்களுக்கு மட்டும்)**

**7.** *எனது கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டை தொலைந்து விட்டது, நான் முன்னர் பயன்படுத்திய அதே படத்துடன் புதிய அட்டையொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமா?*
* **ஆம். அதே படத்துடன் நீங்கள் படத்துடனான மாற்று அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

8. *படத்துடனான பதில் அட்டைக்கு என்னிடம் கட்டணம் அறவிடப்படுமா?*
* **ஆம். பதில் அட்டைக்கு கட்டணமாக ரூபா 500/- அறவிடப்படும்.**

9. *படத்துடனான எனது அட்டையில் படத்தை மாற்றிக் கொள்ளும் நடைமுறை என்ன?*
* **நீங்கள் கார்கில்ஸ் வங்கி படத்துடனான அட்டைக்கான புதிய விண்ணப்பமொன்றைப் பூர்த்தி செய்து, உங்களுடைய புதிய படத்துடன் எமது எந்தவொரு கிளையிலும் சமர்ப்பிக்க முடியும்.**

10. *ஒரு அட்டையில் ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை பொறிப்பதற்கு நான் விண்ணப்பிக்க முடியுமா?*
* **இல்லை, ஒரு அட்டையில் ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை உபயோகிக்க முடியாது.**

11. *எனது கார்கில்ஸ் வங்கி டெபிட் அட்டையின் படத்தையும் மாற்றிக் கொள்ள முடியுமா?*
* **கார்கில்ஸ் வங்கி கடனட்டைகளுக்கு மாத்திரமே படத்துடனான அட்டை சேவை கிடைக்கப்பெறுகின்றது.**

12. *படத்துடனான அட்டையுடன் புதிய கடனட்டைக்கான விண்ணப்பத்தை எவ்வாறு முன்வைப்பது?*
* **வழக்கமான கடனட்டை விண்ணப்பத்தை வாடிக்கையாளர் பூர்த்தி செய்து, படத்துடனான அட்டைக்கான விண்ணப்பத்தை முன்வைக்கலாம். வழக்கமான கடனட்டை விண்ணப்பம் மற்றும் கடனட்டை ஆவணங்களை சரிபார்க்கும் பட்டியலில் "படத்துடனான அட்டை" என கிளையிலுள்ள வங்கி உதவியாளர் குறிப்பிடுவார்.**

**13.** *வாடிக்கையாளர் கிளையில் ஒப்படைக்கும் படங்கள் எவ்வாறு அட்டை மையத்துடன் பகிரப்படுகின்றது?*
* **விரும்பும் படத்துடனான அட்டை மையத்திலுள்ள பிரதிநிதி ஒருவரால் கையாளப்படுகின்ற பொதுவான மொபைல் தொலைபேசி இலக்கத்திற்கு எந்தவொரு டிஜிட்டல் ஊடக வழியாக அவர்கள் படத்தைப் பகிர்ந்து கொள்வதுடன்,**

**வாடிக்கையாளரது தேசிய அடையாள அட்டை மற்றும் வாடிக்கையாளரது படத்தின் மேற்கோள் இலக்கம் ஆகியவற்றையும் பகிர்ந்து கொள்வர்.**